TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8069085

1. District மாவட்டம் : சிவகங்கை  PS: காவல்நிலையம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை  Year: ஆண்டு 2023  FIR No. மு.த.அ. எண் 06/2023  Date: நாள் 17.10.2023

2. (i) Act சட்டம்: P.C. Act  Sections பிரிவுகள்: 7 of Prevention of Corruption Act 1988 as amended by the P.C.(Amendment) Act 2018
(ii) Act சட்டம்: Criminal Procedure Code  Sections பிரிவுகள்: 102 Cr.P.C.
(iii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 16.10.2023  Date from : நாள் முதல்  Date to : நாள் வரை
Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல் 18.00 hrs  Time to : நேரம் வரை 22.30 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 17.10.2023  Time நேரம் : 13.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 17.10.2023  Time நேரம் : 13.30 hrs.

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக  எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்  சுமார் 15 கி.மீ தென்கிழக்கு
Beat Number : முறைக் காவல் எண்  (b) Address : முகவரி ஊராட்சி ஒன்றிய அலுவலகம், காளையார் கோயில், சிவகங்கை மாவட்டம்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்  District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. [illegible]  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் முகம்மது [illegible]
(c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு 25.12.1969  (d) Nationality நாட்டினம் இந்தியன்  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்  Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் துணை ஆய்வர் [illegible] அலுவலர்  (g) Address : முகவரி இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் விருதுநகர் மாவட்டங்கள்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1. திருமதி. கோ. நாகேஸ்வரி, ஒன்றிய பெருந்தலைவர், காளையார் கோயில் ஒன்றியம் 2. திரு. [illegible], ஊராட்சி மன்ற தலைவர் சிலுக்கப்பட்டி 3. திரு. கோவிந்தராஜ், ஒன்றிய பெருந்தலைவரின் கணவர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— தாமதமில்லை —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : —
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

— இணைத்தாளில் இணைக்கப்பட்டுள்ளது —

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS ............................................ on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் [illegible] பதவி [illegible] நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதின் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

17/x/23

A. Kannan
Insp. V&AC 17/10/2023

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
17.10.2023 at 15.00 hrs

Name: பெயர் A. KANNAN
Rank: நிலை Inspector of Police, V&AC, Sivagangai

**கணம் சிறப்பு நீதிபதி அவர்கள், ஊழல் தடுப்பு வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், சிவகங்கை அவர்கள் முன்பாக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.**

இன்று 17.10.2023ம் தேதி 13.00 மணிக்கு காவல் ஆய்வாளர் அ.கண்ணன் ஆகிய நான் சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு அலுவலகத்தில் பணியிலிருந்த போது, இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் விருதுநகர் மாவட்டங்கள் துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.M.A.ஜமால் முகம்மது என்பவர் நிலையம் ஆஜராகி, 16.10.2023ம் தேதி சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் வட்டம், காளையார்கோவில் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடத்திய திடீர் இணை ஆய்வு சம்மந்தமான செயல்முறை நடவடிக்கைகள், பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள், கைப்பற்றப்பட்ட பணம் ரூ.3,34,500/- மற்றும் கைப்பற்றப்பட்ட ஆவணத்துடன் கொடுத்த எழுத்து பூர்வமான புகாரினை பெற்று, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குனரக உயர் அலுவலர்களுக்கு தகவல் தெரிவித்து, சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு குற்ற எண். 06/2023 சட்டப்பிரிவுகள் 7 of Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 மற்றும் 102 Cr.P.Cன்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு. **அனுப்புநர் திரு.M.A. ஜமால் முகம்மது, துணை ஆய்வுக்குழு அலுவலர், இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் விருதுநகர் மாவட்டங்கள் பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, சிவகங்கை,ந.க.எண். I2/49450/2023, நாள்: 17.10.2023.அய்யா, பொருள்:- திடீர் இணை ஆய்வு - சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் வட்டம், காளையார்கோவில் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் 16.10.2023 அன்று திடீர் இணை ஆய்வு நடத்தப்பட்டது - மேல் நடவடிக்கை எடுக்க கோருவது - தொடர்பாக. பார்வை:- எனது செயல்முறை நடவடிக்கைகள், நாள்.16.10.2023. நேற்று 16.10.2023-ம் தேதி இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் விருதுநகர் மாவட்டங்கள் துணை ஆய்வுக்குழு அலுவலரான என்னை அழைத்ததன் பேரில், நான், தங்கள் அலுவலகம் வந்து ஆய்வாளராகிய தங்களை சந்தித்தேன். சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் வட்டம், காளையார்கோவில் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் காளையார்கோவில் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் திருமதி.கோ.இராஜேஸ்வரி என்பவர் ஊராட்சி ஒன்றியம் மூலம் மேற்கொள்ளப்படும் மத்திய அரசின் சுத்தமான குடிநீர் வழங்கும் திட்டம் (Jal Jeevan Scheme) Pipe Line பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டுத்தொகையில் 18 சதவீத GST மற்றும் 10 சதவீதம் பொதுமக்களுக்கு பங்களிப்புத்தொகை போக மீதமுள்ள தொகையில் 3.5% லஞ்சமாக கேட்டுப்பெறுவதாகவும், சிலுக்கப்பட்டி ஊராட்சி மன்றத்தலைவர் திரு.திருமூர்த்தி என்பவர் ஊராட்சிகளில் வசூல் செய்து கொடுப்பதாகவும் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் 16.10.2023-ஆம் தேதி 18.00 மணிக்கு காளையார்கோவில் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் அமைந்துள்ள ஒன்றிய பெருந்தலைவர் அலுவலகத்தில் எனது தலைமையில் சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு காவல் ஆய்வாளர் திரு.அ.கண்ணன் மற்றும் போலீஸ் பார்ட்டி சகிதம் திடீர் இணை ஆய்வு**

மேற்கொள்ளப்பட்டது. மேற்படி ஒன்றிய பெருந்தலைவர் அலுவலகத்தில் வடக்கு பார்த்து இருக்கையில் அமர்ந்திருந்த திருமதி.கோ.இராஜேஸ்வரி, ஒன்றிய பெருந்தலைவர், அவரது கணவர் திரு.கோவிந்தராஜ், துணைத்தலைவர் திரு.ராஜா, ஒப்பந்ததாரர்கள் திரு.கந்தசாமி மற்றும் திரு.மனோகரன் ஆகியோரிடம் துணை ஆய்வுக்குழுவினர் அறிமுகம் செய்துகொண்டு சோதனை மேற்கொள்ளப்பட்டது. காளையார்கோவில் காவல் நிலையத்திலிருந்து வரவழைக்கப்பட்ட பெண்காவல் ஆளிநர் திருமதி. ஜனனி, மு.நி.கா.2291 என்பவர் மூலம் திருமதி.கோ.இராஜேஸ்வரி, ஒன்றிய பெருந்தலைவரை சோதனையிட்டபோது அவரது பர்சில் பணம் ரூ.2,400/- இருந்தது. அந்தப்பணம் குறித்து அவரிடம் கேட்டபோது, அவருடைய செலவுக்கான சொந்தப்பணம் என்று கூறியதால் அந்த பணம் ரூ.2,400/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தின் போர்டிகோவின் அருகில் கிழக்குப்பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அவருக்கு சொந்தமான TN63 BJ 5859 பதிவெண் கொண்ட Silver Metalic colour INNOVA CRYSTA வாகனத்தை சோதனை செய்தபோது, வாகன ஓட்டுனர் இருக்கைக்கு பின்புறமுள்ள இருக்கையில் இரண்டு ஐநூறு ரூபாய் நோட்டு கட்டுக்கள் கத்தையாக மொத்தம் ரூ.1,00,000/- (Rs.500/- X 200 ) இருந்தது. அந்தப்பணம் குறித்து ஒன்றிய பெருந்தலைவர் திருமதி.கோ.இராஜேஸ்வரி மற்றும் அவரது கணவர் திரு.கோவிந்தராஜ் ஆகியோரை விசாரித்தபோது, அவர்கள் சரியான முகாந்திரம் கூறவில்லை. ஆகவே, மேற்படி கணக்கில் வராத லஞ்சப்பணம் ரூ.1,00,000/- (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் இணை ஆய்வின்போது, ஒன்றிய பெருந்தலைவர் அலுவலகத்தில் இருந்த ஒன்றிய பெருந்தலைவர் திருமதி.இராஜேஸ்வரியின் கணவர் திரு.கோவிந்தராஜ் என்பவரை விசாரித்தபோது, தனது மனைவியின் வாகன ஓட்டுனர் சொந்த வேலை காரணமாக மதுரைக்கு சென்றதால், அவரை வீட்டிற்கு அழைத்துச்செல்ல தன்னுடைய TN63 BJ 5859 Innova Crysta வாகனத்தில் காளையார்கோவில் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு வந்ததாக கூறினார். அவரை சோதனையிட்டபோது, அவரது இடது பக்க பேண்ட் பாக்கெட்டில் பணம் ரூ.16,600/- இருந்தது. அந்தப்பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது, அவர் செலவுக்காக வைத்திருந்த சொந்தப்பணம் என்று கூறியதால், அந்தப்பணம் ரூ.16,600/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. இந்த திடீர் இணை ஆய்வின்போது, மேற்படி அலுவலகத்தில் இருந்த, ஒன்றிய துணை பெருந்தலைவர் திரு.அ.ராஜா என்பவரை விசாரித்தபோது, அவர் மருதுபாண்டியர் குருபூஜை விழாவை ஒன்றியத்தின் சார்பாக நடத்துவது சம்மந்தமாக ஆலோசனை செய்வதற்கு வந்ததாக கூறினார். அவரை சோதனை செய்ததில், அவரது சட்டைப்பாக்கெட்டினுள் பணம் ரூ.3,100/- இருந்ததது. அந்தப்பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது, அது அவரது சொந்தப்பணம் என்று கூறியதால், மேற்படி பணம் ரூ.3,100/- அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. இந்த திடீர் இணை ஆய்வின்போது, மேற்படி அலுவலகத்தில் இருந்த, தனியர் திரு.M.மனோகரன், வயது 65, த/பெ.முத்தணன், ஒப்பந்ததாரர், கதவு எண்.37, வ.உ.சி

தெரு, சிவகங்கை என்பவரை விசாரித்தபோது, அவர் நூலக கட்டிடத்திற்கு பில் கையெழுத்து பெற யூனியனுக்கு வந்ததாகவும், ஒப்பந்ததாரர் கந்தசாமியை சந்தித்த பின், துணைத்தலைவர் திரு.ராஜாவை சந்தித்து டீ சாப்பிட்டு செல்வோம் என கூறியதால், இருவரும் ஒன்றிய தலைவர் அறைக்கு வந்ததாக கூறினார். அவரை சோதனை செய்தபோது, அவரிடம் பணம் ரூ.1,240/- இருந்தது. அந்தப்பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது, அவரது சொந்தப்பணம் என்று கூறியதால் மேற்படி பணம் ரூ.1,240/- அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. இந்த திடீர் இணை ஆய்வின்போது, மேற்படி அலுவலகத்தில் இருந்த, தனியர் திரு.இ.கந்தசாமி, வயது 53, த/பெ.இருளப்பன், ஒப்பந்ததாரர், பெரிய கிளுவச்சி, பருத்திக்கண்மாய் அஞ்சல், காளையார்கோவில் வட்டம், சிவகங்கை மாவட்டம் என்பவரை விசாரித்தபோது, அவர் மாட்டுக்கொட்டகை பில் விஷயமாக இஞ்சினியரிடம் கையெழுத்து வாங்குவதற்காக யூனியனுக்கு வந்ததாகவும், தனது கட்சிக்காரர் திரு.ராஜா (ஒன்றியக்குழு துணைத்தலைவர்) அவர்களை சந்தித்துவிட்டு செல்வதற்காக ஒன்றியக்குழு தலைவர் அறைக்கு வந்ததாக கூறினார். அவரை சோதனை செய்தபோது, அவரிடம் பணம் ரூ.20/- இருந்தது. அந்தப்பணம் அவரது சொந்தப்பணம் என்று கூறியதால் மேற்படி பணம் ரூ.20/- அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. இந்த திடீர் இணை ஆய்வின்போது ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தின் ஒன்றிய பெருந்தலைவர் அலுவலகத்திற்கு அருகில் முதல் தளத்திற்கு செல்லும் மாடிப்படிக்கு அருகாமையில் நின்று கொண்டிருந்த திரு.திருமூர்த்தி, ஊராட்சி மன்ற தலைவர்,சிலுக்கப்பட்டி என்பவரை சோதனை செய்ததில், அவரது உள்பக்க அரைக்கால் டவுசர் பாக்கெட்டில் இருந்து, கட்டு கட்டாக ஐநூறு ரூபாய் நோட்டுக்களை எடுத்து ஆஜர் செய்தார். அதில் மொத்தம் ரூ.2,34,500/- (ரூ.500/- X 469)-ம், அவர் ஆஜர் செய்த மணி பர்சில் ரூ.3,450/-ம் இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது, மேற்படி மணி பர்சில் இருந்த பணம் ரூ.3,450/- அவர் போக்குவரத்து செலவுக்காக கொண்டுவந்திருந்த பணம் என்று கூறியதால் அந்தப்பணம் ரூ.3,450/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி பணம் ரூ.2,34,500/- குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது, காளையார்கோவில் ஊராட்சி ஒன்றியம் மூலம் மேற்கொள்ளப்படும், மத்திய அரசின் சுத்தமான குடிநீர் வழங்கும் திட்டம் (Jal Jeevan Scheme) Pipe Line பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டுத்தொகையில் 18 சதவீத GST மற்றும் 10 சதவீதம் பொதுமக்களுக்கு பங்களிப்புத்தொகை போக மீதமுள்ள தொகையில் 3.5% கமிஷன் ஒன்றிய பெருந்தலைவர் திருமதி.கோ.இராஜேஸ்வரி அவர்களுக்கு கொடுப்பதற்காக, இன்று ஊராட்சிகளிலிருந்து வசூலித்து வைத்திருந்த தொகை என்று கூறினார். அதன் விபரம்,

| வ. எண். | ஊராட்சியின் பெயர் | 16.10.2023-ம் தேதி வசூல் செய்யப்பட்ட லஞ்சப்பணம் (ரூ.) |
|---|---|---|
| 1 | மேலமருங்கூர்ஊராட்சி | 46,500/- |
| 2 | முத்தூர் வாணியங்குடி ஊராட்சி | 11,500/- |
| 3 | முத்தூர் வாணியங்குடி ஊராட்சி | 32,500/- |
| 4 | முத்தூர் வாணியங்குடி ஊராட்சி | 15,200/- |
| 5 | சொக்கநாதபுரம் ஊராட்சி | 55,000/- |
| 6 | அம்மன்பட்டி ஊராட்சி | 41,000/- |
| 7 | சேதாம்பல் ஊராட்சி | 11,000/- |
| 8 | தென்மாவளி ஊராட்சி | 16,600/- |
| 9 | காளக்கண்மாய் ஊராட்சி | 5,200/- |
| மொத்தம் | | 2,34,500/- |

மேற்கண்டவாறு கமிஷன் வசூல் செய்யப்பட்ட தொகைக்கான விபரங்களை Ruled Long Note Book-இல் எழுதி வைத்துள்ளதாக கூறி மேற்படி நோட்டினை ஆஜர் செய்தார். அவரிடமிருந்து மேற்படி லஞ்சப்பணம் ரூ.2,34,500/- மற்றும் மேற்படி Ruled Long Note Book ஆகியவை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் இணை ஆய்வின்போது 1) திருமதி.கோ.ராஜேஸ்வரி, ஒன்றிய பெருந்தலைவர், 2) திரு.அ.ராஜா, ஒன்றிய துணை பெருந்தலைவர், 3) திரு.திருமூர்த்தி, ஊராட்சி மன்ற தலைவர், சிலுக்கப்பட்டி மற்றும் தனியர்கள் 4) திரு.கோவிந்தராஜ், ஒன்றிய பெருந்தலைவரின் கணவர், 5) திரு.மனோகரன், ஒப்பந்ததாரர், 6) திரு.கந்தசாமி, ஒப்பந்ததாரர் ஆகியோரை விசாரித்து என்முன்பாக வாக்குமூலங்கள் பெறப்பட்டது. இந்த திடீர் இணை ஆய்வின்போது கணக்கில் வராத லஞ்சப்பணம் மொத்தம் ரூ.3,34,500/- மற்றும் சிலுக்கப்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் திரு.திருமூர்த்தி என்பவரது Ruled Long Note Book ஆகியவை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் இணை ஆய்வு செயல்முறை நடவடிக்கை குறிப்புகள் 16.10.2023-ம் தேதி 22.30 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்த திடீர் இணை ஆய்வின்போது கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத லஞ்ச பணம் மொத்தம் ரூபாய் ரூ.3,34,500/-, பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள்-6, திடீர் இணை ஆய்வு சம்பந்தமான எனது நடவடிக்கை குறிப்பு மற்றும் கைப்பற்றப்பட்ட Ruled Long Note Book ஆகியவற்றை இத்துடன் ஒப்படைக்கிறேன். இதுசம்மந்தமாக 1)திருமதி.கோ.ராஜேஸ்வரி, ஒன்றிய பெருந்தலைவர், காளையார்கோவில் ஒன்றியம் 2) திரு.திருமூர்த்தி, ஊராட்சி மன்ற தலைவர், சிலுக்கப்பட்டி மற்றும் 3) திரு.கோவிந்தராஜ், ஒன்றிய பெருந்தலைவரின் கணவர் ஆகியோர் மீது உரிய நடவடிக்கை எடுக்கும்படி

கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு ஒப்பம்/- (M.A. ஜமால் முகம்மது),துணை ஆய்வுக்குழு அலுவலர்,இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் விருதுநகர் மாவட்டங்கள் (17.10.2023).

Sir, Received this report along with enclosures and I have registered case in Sivagangai Vigilance and Anti Corruption in Cr.No. 06/2023 u/s 7 of Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 and 102 Cr.P.C., on 17.10.2023 at 13.30 hrs. sdxxxx (A.KANNAN), Inspector of Police, Vigilance and Anti Corrption, Sivagangai, 17.10.2023.

The Original FIR along with report enclosed with Joint Surprise Check proceedings, Statements of 1)Tmt. Rajeshwari, 2)Tr.Thirumoorthy, 3) Tr.Govindaraj, 4)Tr.Raja, 5)Tr.Kandasamy and 6) Tr.Manoharan are submitted to the Honorable Special Judge, Special Court for Trial of Cases under Prevention of Corruption Act, Sivagangai and the copies are submitted to the concerned officers.

A. Kannan
Inspr/V&AC
17/10/2023

(A.KANNAN),
Inspector of Police,
Vigilance and Anti Corrption,
Sivagangai.